# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 141/நகராட்சி/2017**

**நாள் : 07/11/2018**

**புலவர் ஏ.சு.மணி,**
**தாம்பரம் – 600 059.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தாம்பரம் நகராட்சி, தாம்பரம்.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, தாம்பரம் கிழக்கு, இரும்புலியூர், மகாலட்சுமி தெரு, கதவு எண். 40/1 & 2 என்ற முகவரியில் வசிக்கும் திரு ஏ.சு. மணி அவர்களின் 28.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 141/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, தாம்பரம் கிழக்கு, இரும்புலியூர், மகாலட்சுமி தெரு, கதவு எண். 40/1 & 2 என்ற முகவரியில் வசிக்கும் திரு ஏ.சு. மணி என்பவர், சென்னை–73, சேலையூர் பகுதியில் செயல்பட்டுவரும் ரூபி பில்டர்ஸ் நிறுவனம் குறித்து கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்:-

(1) அரசு /CMDA / DTP விதிகள் புறக்கணிக்கப்படுவது ;

(2) தெருக்கள், நீர்வரத்து கால்வாய், கழிவு நீர் கால்வாய் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிப்பு ;

(3) ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் கட்ட CMDA / DTP அலுவலர்களுக்கு கையூட்டு வழங்குவது ;

(4) மேலும், இம்முறைமன்ற நடுவத்தின் நடவடிக்கைக்கு உட்படாத வேறு சில கோரிக்கைகள்.

2. உள்ளாட்சி அமைப்புகளின் பொதுப்பணியாளர் சம்பந்தப்பட்ட ஊழல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகச் சீர்கேடு குறித்த நேர்வுகளை விசாரிக்கும் இம்முறைமன்ற நடுவத்தில், CMDA / DTP அலுவலர்களுக்கு கையூட்டு வழங்கும் குற்றச்சாட்டு, பினாமிகளை வைத்து வீடுகளை பதிவு செய்தல், வரி ஏய்ப்பு மற்றும் கருப்பு பணம் மூலம் முழுப்பக்கம் விளம்பரம் செய்வது மற்றும் இம்முறைமன்ற அதிகார வரம்பிற்கு உட்படாத பல குற்றச்சாட்டுகளை முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் நடவடிக்கைக்கு தாக்கல் செய்துள்ளார். கட்டட விதிகளை மீறி கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளனவா என்பதை நகராட்சி அலுவலர்கள் கவனிக்கத் தவறியுள்ளனரா என்பது குறித்து மட்டுமே இவ்வழக்கில் இம்முறைமன்ற நடுவம் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள இயலும். எனவே, முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 23.11.2017 நாளிட்ட விசாரணைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. முறையீட்டு மனுதாரர் அன்றைய நாள் விசாரணைக்கு வருகை தரவில்லை.

3. எனினும், கட்டட விதிகள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டு ரூபி பில்டர்ஸ் நிறுவனத்தால் தனிவீடுகள் மற்றும் அடுக்ககங்கள் கட்டப்பட்டுள்ளனவா என்பது குறித்த அறிக்கையினை தாம்பரம் நகராட்சி ஆணையரிடம் கோரிப் பெறப்பட்டது. நகராட்சி ஆணையர் தனது 29.05.2018 நாளிட்ட கடிதத்தில், ரூபி பில்டர்ஸ் நிறுவனத்தினர் சுமார் 25 ஆண்டுகளாக சென்னை பகுதிகளில் குடியிருப்புக் கட்டிடங்களை கட்டி வருவதாகவும், அந்நிறுவனம் கட்டிட விதிகள் மீறியதாகப் புகாரோ அல்லது வழக்குகளோ ஏதும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் புகார் மனுவில், குறிப்பிட்டுள்ளதையும் தெரிவிக்காமல், நிறுவனத்தின் மீது குறை கூறியே புகார் தெரிவித்துள்ளார் என்றும் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

4. தாம்பரம் நகராட்சி ஆணையரிடம் 26.07.2018 மற்றும் 29.10.2018 ஆகிய நாட்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. CMDA விதிகளின் கீழ் தாம்பரம் நகராட்சியில் கட்டட அனுமதி வழங்கும் பொழுது விதிகளை சரிபார்த்தே வழங்கப்படுகின்றன என்றும், நீர்வரத்துக் கால்வாய், கழிவு நீர்க் கால்வாய் மற்றும் அரசுப் புறம்போக்கு நிலம் போன்றவற்றில் கட்டிடம் கட்ட அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்று விசாரணையின் போது நகராட்சி ஆணையர் தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட விசாரணையினைத் தொடர்ந்து தாம்பரம் நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் 2013–ஆம் ஆண்டு முதல் 2016–ஆம் ஆண்டு முடிய கட்டப்பட்ட கட்டுமானங்கள் மற்றும் விதிமீறல்கள் சம்பந்தப்பட்ட அறிக்கையினைத் தாக்கல் செய்தார். மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் கட்டப்பட்ட 58 கட்டடங்களில் set back விதிமீறல் தவிர்த்து வேறு விதிமீறல்கள் எதுவும் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள நீர்நிலை ஆக்கிரமிப்பு, அரசு நிலம் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. 29.10.2018 அன்று தாம்பரம் நகராட்சி ஆணையரிடம் விசாரணை மேற்கொண்டபொழுது, முறையீட்டு மனுதாரர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்றும் புகாருக்குரிய ரூபி பில்டர்ஸ் நிறுவனரும் அதே கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் ஒரே கட்சிக்குள் போட்டி காரணமாக புகார் எழுதியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

5. கட்டுமான நிறுவனம் குறித்து அடிப்படை ஆவண ஆதாரங்கள் இன்றி புகார் செய்வதும், முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு வரத் தவறுவதும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் செய்து இம்முறைமன்ற நடுவம் மற்றும் அலுவலர்களின் காலநேரத்தை வீணாக்கும் முறையீட்டு மனுதாரரின் செயல் ஏற்புடையதல்ல. எனினும், set back violation உள்ள கட்டிடங்களின் விதிமீறல்கள் குறித்து உரிய விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை எடுத்திட தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **நவம்பர்** திங்கள், **7–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **புலவர் ஏ.சு.மணி,**
**கதவு எண். 40/1 & 2, மகாலட்சுமி தெரு,**
**இரும்புலியூர், தாம்பரம் கிழக்கு,**
**சென்னை – 600 055.**

2. **நகராட்சி ஆணையர்,**
**தாம்பரம் நகராட்சி,**
**தாம்பரம்,**
**சென்னை – 600 045.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**